]1992 ஏப்ரல் 27

செக்டாம் கட்டி கீழேயுள்ள பத்து கண்மாய்களுக்கு பாசன வசதி செய்கின்ற திட்டம் இன்றைக்கு அரசினுடைய பரிசீலனையில் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியினுடைய விவசாயிகளுடைய நலனைக் கருதி இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தப் பணியினுடைய விவரத்தைத் தெரிந்து, எந்த அளவிற்கு இருக்கின்ற நிதியாதாரத்தை வைத்து அதைச் செயல்படுத்த முடியும் என்பதை ஆய்வு செய்து அந்தப் பணியினுடைய பலனை, விகிதாச்சாரத்தையும் கணக்கிலே எடுத்து அந்தப் பணிக்கு சாத்தியக்கூறுகள் இருக்குமானால், அதனால் அரசுக்கு நலம் பயக்குமானால் அந்தப் பணியை எடுத்துக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 638, திரு. ச. புரட்சிமணி. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

638—

குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை.

*1267 திரு. ச. புரட்சிமணி :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மங்களூர் தொகுதியின் குடிநீர் பிரச்சனையை தீர்க்க நிரந்தரத் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மங்களூர் தொகுதியில் நிலவும் குடிநீர்ப் பற்றாக்குறையையும், அப்பகுதியில் குடிநீர் ஆதாரம் போதிய அளவுடனும் தரமானதாகவும் இல்லை என்பதையும் கருத்தில் கொண்டு, கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் தொலை தூரங்களில் இருந்து குடிநீர் கொண்டு வந்து வழங்க பல திட்டங்கள் ஆய்வில் உள்ளன.

திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மங்களூர் தொகுதியில் நல்லூர் ஒன்றியத்தில் உள்ள கிராமங்களுக்கு குடிநீர் கொண்டு வருவதற்கான திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா? இந்தத் திட்டம் எந்தப் பகுதியில் ஏற்படுத்தப்படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேப்பூர் மற்றும் 17 குடியிருப்புகள் அடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் நல்லூர்

1992 ஏப்ரல் 27]

ஒன்றியத்தில் அமைக்கப்பட இருக்கிறது. சுமார் 18 கிராமங்கள் அடங்கிய அந்த கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ச. புரட்சிமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த கிராமங்கள் எவை என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாத்தாநத்தம் சாந்த நத்தம், சாந்தநத்தம் புதுகாலனி, மேலூர், ஏ. அகரம், மருதத்தூர், மருதத்தூர் காலனி, பூலாம்பாடி காலனி, கலிய மேடு, நிறமணி, நிறையூர், வேப்பூர், அண்ணாநகர், நட்டுவர் காலனி, ஐயநார் பாளையம், நெல்லிக்குப்பம் பாளையம், காட்டுமன்னார் போன்ற கிராமங்கள் இந்த கூட்டுக் குடிநீர் திட்டத்தில் அடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 639, திரு. சோ. இராசாராமன், இருக்கையில் இல்லை. [குறுக்கீடு] அவருக்கு பதிலாக திரு சிங்கை கோவிந்தராசு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

639—

மின் விநியோகப் பொறுப்பினை மீண்டும் மின்சாரத் துறையிடமே ஒப்படைத்தல்.

*2621 திரு. சோ. இராசாராமன்:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நகராட்சிகளின் பொறுப்பில் உள்ள மின் விநியோகப் பொறுப்பினை மீண்டும் மின்சாரத் துறையிடமே ஒப்படைத்து விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.